
**நமது சமூகத்தில், ஒவ்வொரு நாளும், ஏறத்தாழ 70 ஆஸ்திரேலியர்களுக்கு** Cardio-Pulmonary Resuscitation (இதய-உயிர்ப்பிப்பு (CPR)) சிகிச்சை தேவைப்படுகிறது. மார்பு அழுத்தல்கள் மற்றும் உயிர்காப்பு சுவாசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் உயிர்காப்புச் செயல்பாட்டு முறையே CPR என்பதாகும். மார்பு-அழுத்தல்கள் உடலிலுள்ள முக்கியமான உறுப்புகளுக்கு இரத்தத்தை அனுப்பிக்கொண்டிருக்கும், மற்றும் சுவாச-ஏற்றல்கள் ஆக்ஸிஜன் எனப்படும் பிராணவாயுவை உடலுறுப்புகளுக்குக் கொடுக்கும்.

அவசர நிலை உள்ள இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்துசேர சராசரியாக 10 நிமிடங்கள் ஆகும் என்பதால், CPR முதலுதவியைச் செய்வது எப்படி என்பது சமூகத்தில் உள்ள மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது முக்கியம்.

## இன்று உங்களுடைய குழந்தையின் சுவாசம் நின்றுவிட்டிருந்தால் என்ன செய்யவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

(12 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய) ஒரு கைக்குழந்தை அல்லது (ஒரு வருடத்திற்கு மேற்பட்ட வயதுடைய) ஒரு குழந்தைக்கு CPR சிகிச்சையளிப்பதில் அடங்கியுள்ள படி-நிலைகளைக் கற்றுத்தருவதற்காக **‘பெற்றோர்களுக்கான CPR பயிற்சி’ எனும் இலவச இணையவழித் திட்டம்** ஒன்றினை ‘வெஸ்ட்மீட் குழந்தைகள் மருத்துவமனை’ உருவாக்கியுள்ளது. இந்த சிகிச்சைப் படி-நிலைகளை வயதுவந்த பெரியவர்களுக்காகவும் பயன்படுத்தலாம்.



**இந்தத் திட்டத்தின் மூலமாக இன்று நீங்கள் தெரிந்துகொள்ளும் விடயங்களும், கற்றுக்கொள்ளும் திறன்களும் நாளை ஒரு உயிரைக் காப்பாற்றக் கூடும். எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் இருப்பதை விட, CPR சிகிச்சையளிக்க மேற்கொள்ளப்படும் எவ்வொரு முயற்சியும் மேலானதே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

# பெற்றோர்களுக்கான CPR பயிற்சி

**cprtrainingforparents.org.au** எனும் வலைத்தலப் பக்கத்தில் ‘பெற்றோர்களுக்கான CPR பயிற்சி’க்கான செய்முறை கிடைக்கும், மற்றும் இதை அடைய நீங்கள் இணையத்தில் உள்-நுழைவு (login) செய்யவேண்டிய அவசியம் இல்லை. இதில் உள்ள ஏழு பகுதிகளையும் செய்து முடிக்க ஏறத்தாழ 1.5 மணி நேரம் ஆகும், மற்றும் இந்தப் பகுதிகளை நீங்கள் தனித் தனியாகவும் செய்து முடிக்கலாம்.

**இந்தப் பயிற்சித் திட்டத்தில் கிடைக்கும் பகுதிகளில் உள்ளடங்குவன:**



குழந்தைகளுக்கான CPR



Automated External Defibrillator (தானியங்கு வெளிப்புற இதய-இயக்க-மின்-சாதனம்) (AED)



கைக்குழந்தைகளுக்கான CPR



சுயநினைவுக்குத் திரும்பும் வரையில் ஒருக்களித்த நிலையில் (recovery position) படுக்க வைத்தல்



முகக் கவசங்கள் மற்றும் முகக் கேடயங்கள்



மூச்சடைப்பு



தீக் காயங்களுக்கான முதலுதவி

மருத்துவமனை’-யில் இருந்து கிடைக்கும் குழந்தைகள் நலம் மற்றும் பாதுகாப்பு குறித்த தகவல்களுக்கு **kidshealth.schn.health.nsw.gov.au** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

இந்தத் தகவல் ஏட்டின் மொழிபெயர்ப்பிற்கு Endeavour Energy பெருமிதத்துடன் உதவுகிறது.

KIH3196/1220



Tamil

CPR Training for Parents

cprtrainingforparents.org.au

# பெற்றோர்களுக்கான CPR பயிற்சி

## உங்களுடைய குழந்தையின் சுவாசம் நின்றுவிட்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

kids health
the children's hospital at Westmead
Child Health Promotion Unit

The Sydney children's Hospitals Network
care, advocacy, research, education

# கைக்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கான DRS ABCD அணுகுமுறை

**D**

உங்களுக்கும், குழந்தைக்கும் மற்றும் அவ்விடத்திலுள்ள எவருக்கும் எவ்வித **ஆபத்தும் (DANGER)** இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

**ஆபத்து ஏதும் இருக்கிறதா?**

ஆம் → இருக்கும் ஆபத்தினை அகற்றுங்கள், அல்லது குழந்தையை ஆபத்திலிருந்து அகற்றுங்கள்

↓ இல்லை

**R**

குழந்தையின் நிலையை அறிய பேச்சுக் கொடுத்து , குழந்தை **பதிலளிக்கிறதா (RESPONSE )** என்று பாருங்கள்

குழந்தையை நீங்கள் தொடும்போது அல்லது அதனுடன் பேசும்போது குழந்தை கண்களைத் திறக்கிறதா அல்லது சப்தம் ஏதும் எழுப்புகிறதா?

**குழந்தை பதிலளிக்கக் கூடிய நிலையில் இருக்கிறதா?**

ஆம் → குழந்தை மீண்டும் சுயநினைவுக்குத் திரும்பும் வரையில் குழந்தையுடனே இருங்கள்

↓ இல்லை

**S**

'மூன்று பூஜ்யம்' (000) இலக்கத்தை அழைத்து ஆம்புலன்ஸ் வாகன **உதவி வேண்டுமெனக் கேளுங்கள் (SEND FOR HELP)**

↓

**A**

குழந்தையின் **சுவாசப் பாதையைத் (AIRWAY)** திறங்கள்



**கைக்குழந்தையின் சுவாசப் பாதை**

நடுநிலையான (இயல்பான) நிலையில் குழந்தையை வைத்து, அதன் தாழ்வாயை உயர்த்துங்கள்



**குழந்தையின் சுவாசப் பாதை**

தலையைச் சாய்த்துத் தாழ்வாயை உயர்த்துங்கள்

↓

**B**

குழந்தை எப்போதும் போல சாதாரணமாக **சுவாசித்துக்கொண்டிருக்கிறதா (BREATHING)** என்று பாருங்கள்

10 வினாடி நேரத்திற்கு அவதானமாகக் கவனியுங்கள், செவிமடுத்துக் கேளுங்கள் மற்றும் தொட்டுப்பாருங்கள்

**குழந்தை எப்போதும் போல சாதாரணமாக சுவாசித்துக்கொண்டிருக்கிறதா?**

ஆம் → சுயநினைவுக்குத் திரும்பும் வரையில் குழந்தையை ஒருக்களித்த நிலையில் (recovery position) படுக்க வைத்து, ஆம்புலன்ஸிற்காகக் காத்திருக்கும் வேளையில் அடிக்கடி தொடர்ந்தும் குழந்தையை கண்காணித்துக் கொண்டிருங்கள்

↓ இல்லை

**C**


**CPR** -ஐத் துவக்குங்கள்

ஒரு நிமிடத்திற்கு 100 – 120 அழுத்துதல்கள் என்ற வீதத்தில், மார்புப் பகுதியானது அதன் 1/3 பகுதி ஆழத்திற்குக் கீழ் நோக்கிச் செல்லுமாறு மார்பினை அழுத்தி அழுத்தி விடுங்கள்

ஆம்புலன்ஸ் வந்து குழந்தையைப் பொறுப்பேற்கும் வரை, அல்லது குழந்தை பதிலளிக்கத் துவங்கும் வரை இப்படித் தொடர்ந்து செய்துகொண்டிருங்கள்


**கைக்குழந்தைகளுக்கான CPR**

30 அழுத்தல்கள் → 2 சுவாச ஏற்றல்கள்



**குழந்தைகளுக்கான CPR**

30 அழுத்தல்கள் → 2 சுவாச ஏற்றல்கள்



↓

**D**

**'டீஃபிப்ரிலேட்டர்' (DEFIBRILLATOR)** எனப்படும் இதய-இயக்க-மின்சாதனம் அல்லது **AED** ஒன்று கிடைத்தால் அதை முடுக்கிவிட்டு, சொல்லப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்

**cprtrainingforparents.org.au**